( மாணவர்கள் பெயர்,பள்ளி,இவற்றை எழுதவும், ) தேர்வெழுதிய நாள் :

**பாடம் : புலி தங்கிய குகை**

வகுப்பு 7

இணைய பணித்தாள்

பெயர் :

பள்ளி

1.யாண்டு என்னும் சொல்லின் பொருள் ______________

அ. எனது ஆ. எங்கு இ. எவ்வளவு ஈ. எது

2. யாண்டுளனோ? – என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது ___________

அ. யாண்டு + உளனோ? ஆ. யாண் + உளனோ?

இ. யா + உளனோ? ஈ. யாண்டு + உனோ?

3. கல் + அளை – என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ___________

அ. கல்லளை ஆ. கல் அளை இ. கலலளை ஈ. கல்லுளை

4. சிற்றில் என்பதன் பொருள்______________

அ. சிறு ஊர் ஆ. சிறு வீடு இ. சிறு கூடு ஈ. சிறு ஆடை

5 . காவற் பெண்டு என்பவர்______________

அ. காவலர் ஆ. அமைச்சர் இ. ஆசிரியர் ஈ. புலவர்

6. போரவைக் கோப்பெரு நற்கிள்ளி என்பவர்_________

அ. பாண்டிய மன்னன் ஆ. சேர மன்னன் இ. சோழ மன்னன் ஈ. குறுநில மன்னன்

7. போரவைக் கோப்பெரு நற்கிள்ளியின் செவிலித்தாய் ___________

அ. காரைக்கால் அம்மையார் ஆ. வெண்ணிக்குயத்தியார் இ. ஔவையார்

ஈ. காவற் பெண்டு

8. எட்டுத் தொகை நூல்களில் ஒன்று______________

அ. திருக்குறள் ஆ. கம்பராமாயணம்

இ. புறநானூறு ஈ. பிள்ளைத்தமிழ்

> சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
> யாண்டு உளனோ எனவினவுதி என்மகன்
> யாண்டுஉளன் ஆயினும் அறியேன் ஓரும்
> புலிசேர்ந்து போகிய கல்அளை போல
> ஈன்ற வயிறோ இதுவே
> தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே*
>
> –காவற்பெண்டு

9. பாடலில் காணப்படும் சீர் எதுகை______________

அ. சிற்றில் – நற்றூண் ஆ. சிற்றில் – நின்மகன்

இ. யாண்டு – உளனோ ஈ. ஈன்ற – இதுவே

10. பாடலில் காணப்படும் மோனை நயம்______________

அ. யாண்டு – என்மகன் ஆ. யாண்டு – புலிசேர்ந்து இ. யாண்டு – யாண்டு உளன்

ஈ. புலிசேர்ந்து – ஈன்ற

LIVEWORKSHEETS